செய்தி வெளியீட்டு எண்.101 நாள்.16.02.2017

# பத்திரிக்கை செய்தி

## திருவள்ளுர் மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக மூலமாக சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய அலுவலகம் மூலமாக உதவி பொறியாளர்கள், இளநிலை உதவியாளர் காலி பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகிறது. என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இஆ.ப., அவர்கள் தகவல்.

~~~~~

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய அலுவலகம் மூலமாக உதவி பொறியாளர்கள், இளநிலை உதவியாளர் உள்ளிட்ட 313 பணிக்காலியிட அறிவிப்புகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

<u>**கல்வித்தகுதி (இளநிலை உதவியாளர்)**</u>

**அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட பட்டப் படிப்புடன் (10+ 2 + 3) கணினி பயிற்சியில் சான்றிதழ் பெற்றிருத்தல் (Any Degree with Computer Certificate Course) அவசியம்.**

<u>**கல்வித்தகுதி (உதவிப்பொறியாளர்)**</u>

**அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட பொறியியல் பட்டப் படிப்பு (சிவில், மெக்கானிக்கல் மற்றும் எலக்ட்ரிக்கல் பிரிவு) B.E (Civil / Mechanical / Electrical – Engineering) பெற்றிருத்தல் அவசியம்.**

**வயது வரம்பு:**

**01.07.2017-தேதிப்படி SCA, ST, SC, MBC, BCM, BC ஆகிய பிரிவினருக்கு 35 வயதுக்குள் இருத்தல் வேண்டும். இதர பிரிவினர் 30 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.**
**மாற்றுத்திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களுக்கு அரசு விதிமுறைகளின்படி வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.**

ஆன்லைன்மூலம் மேற்படி பணியிடத்திற்கு விண்ணப்பிக்க **கடைசி தேதி: 06.03.2017**

விண்ணப்பிக்க விரும்புவோர் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய அலுவலக இணைய தளமான **www.chennaimetrowater.gov.in–ல் ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்** என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~